# வைரமுத்து திரையிசைப் பாடல்களில் தத்துவநோக்கு

*பேராசிரியர் (செல்வி) செ. சிவசுப்பிரமணியம்*
தமிழ்த்துறை, கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: பிப்ரவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.18502188

**ஆய்வுச்சுருக்கம்**

*கவிஞர் வைரமுத்து, அவர் தனக்கு முன்னுள்ள திரையிசைப் பாடல்களைப் பின்பற்றியும் சமகாலத்துக் கவிஞர்களைப் பின்பற்றியும் தனக்கென ஒரு படைப்பாற்றலை உருவாக்கித் திரையுலகில் முக்கியமான ஒருவராகத் திகழ்கின்றார். இவ் ஆய்வின் நோக்கமாக கவிஞர் வைரமுத்துவின் திரையிசைப் பாடல்களில் தத்துவ நோக்குப் பற்றிப் பெரிதும் யாரும் கவனம் எடுப்பதில்லை. அதனால் அதனை ஆய்வுசெய்யும் நோக்கில் இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. அரசியல், சமூகம், காதல், உலகு, உயிர், கடவுள் எனப் பல பொருளில் தத்துவத்தைப் பேசுவதைத் தரிசிக்கலாம். கவிஞர் வைரமுத்துவின் பாடல்களில் தத்துவப் பாடல்கள் காணப்படுகின்றன என்பதே ஆய்வின் கருதுகோளாக அமைகின்றது. இவ்வாய்வானது விமர்சன ஆய்வுமுறை, விபரண ஆய்வுமுறை என்ற ஆய்வு முறையியல்களைக் கொண்டுள்ளது.*

***திறவுச்சொற்கள்:*** *திரையிசைப் பாடல்கள், தத்துவநோக்கு, உலகு, கடவுள், ஆன்மா.*

## அறிமுகம்

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் 1980 ஆம் ஆண்டு தமிழ்த்திரை அரங்கில் தோற்றம் பெற்றவர். எல்லோரது உள்ளங்களிலும் இடம்பிடித்த ஒரு மேதை. வைரமுத்து திரையுலகில் பிரவேசித்த வரவு பாரிய தாக்கத்தை உண்டுபண்ணியது. வைரமுத்துவின் திரையிசைப் பாடல்களின் ஊடாக சமூகத்தின் மீது அவருக்கு இருந்த ஆழ்ந்த அக்கறையினையும் புரட்சி மிக்க சிந்தனைகளையும் கொண்டிருந்தமையினைத் தரிசிக்கலாம். வாழ்க்கையின் மெய்யியல் முறைமையினைத் தனது படைப்புக்களில் கட்டமைத்துள்ளார். வாழ்வின் உண்மைகள்தான் தத்துவமாக மிளிர்கின்றன. கவலை, வெறுப்பு தோன்றும்போது தத்துவம் உருவாகிறது. கடவுள், உயிர், உலகு, மரணம், சுடுகாடு, நிலையாமை போன்றவற்றைப் பாடுவதெல்லாம் தத்துவக் கருத்துக்களையே கருத்தாகக் கொள்கின்றன. வைரமுத்துவின் திரையிசைப் பாடல்களில் தத்துவக்கருத்துக்கள் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன என்பதே இவ்வாய்வாக அமைகின்றது.



CamScanner

***காலப்பின்னணி (வைரமுத்து திரையிசைப் பாடல்களுள் பிரவேசித்த காலம்)***

தமிழ்த் திரையிசை மாறிக்கொண்டிருந்த காலகட்டம்தமிழ்த்திரையிசைதொழில்நுட்பத்திற்குள் மாறிக்கொண்டிருந்த காலகட்டத்தில்தான் வைரமுத்து திரையுலகில் கால் பதிக்கிறார். திரையிசைப் பாடல்களை இலக்கிய மேன்மை வாய்ந்ததாக உருமாற்றவும் முற்பட்டார்.

தமிழ்த் திரையிசைப் பாடல்களை அறிவூட்டும் பாடல்களாகவும் தத்துவப்பாடல்களாகவும் சமூகத்திற்கு நல்ல சிந்தனை ஊட்டுவனவாகவும் பாடகர்கள் கட்டமைத்துள்ளனர். அந்தவகையில் பாபநாசசிவன், உடுமலை நாராயணகவி, கவியரசு கண்ணதாசன், வாலி, கவியரசு வைரமுத்து ஆகியோரும் அவர்களைப் போல வேறு சிலரும் இந்தத் திரை இசையுலகில் மிளிர்கின்றனர். பாரதிராஜா, இளையராஜா என்ற ஆளுமைகளோடு தன்னை இணைத்துக் கொண்டவர். கனவு முழுவதிலும் பாரதியைக் கரம்பிடித்துச் சென்றவர்.

***நான் என்பது அறிவு மொழி***
***ஏன் என்பது எனது வழி***
***வான் போன்றது எனது வெளி***
***நான் நாளைய ஞான ஒளி***

***(வைரமுத்து, எந்திரன் திரையிசைப் பாடல், ப.12)***

அறிவு தனது மொழி என்றும், ஞானம் தனது ஒளி என்றும் கூறிச்சென்றும் கூறிச்செல்கின்றார்.

***சேர்த்து வைத்த கண்ணீரைச்***
***சிறையிட்டு நான் பெற்றேன்***
***தெளிந்த ஞானம்***

***(வைரமுத்து. ஆயிரம்பாடல், பா. 44)***

வைரமுத்து அழுது கண்ணீரை வெளிப்படுத்து வதற்குப் பதிலாக ஞானம் பெற்றதாகக் கூறுகின்றார். கண்ணீர் ஏக்கம்தான் ஞானத்தை உண்டாக்குவது.

வைரமுத்து, திரையிசைப் பாடல்களைப் பாடுவதற்கு கால்கோளாக அமைந்தவை திராவிட இயக்கப் பகுத்தறிவுச் சிந்தனை மற்றும் சோசலிசச் சிந்தனை என்பனவாகும். மரபுக்கவிதைகளின் கட்டமைதியையும் புதுக்கவிதையின் சொல்லாட்சியையும் இணைத்துச் செல்கின்றார். பாடல்களில் தொன்மம், படிமம், குறியீடு என்ற வகைகளைக் கையாளுகின்றார்.

கவிஞர் வைரமுத்துவின் கவிதைகள் தமிழ் மரபின் வழிவந்தவை. புதிய சொற்களையும் நிறையக் கையாண்டுள்ளமையினைக் காணலாம். புதிய சொற்கள் கவிதையின் ஆழத்தை உயர்வுபடுத்துகின்றன.

***பொன் மாலைப் பொழுது - இது ஒரு***
***பொன் மாலைப் பொழுது***
***வானம் எனக்கொரு போதிமரம்***
***நாளும் எனக்கொரு சேதிதரும்***
***ஒருநாள் உலகம் நீதிபெறும்***
***திருநாள் நிகழும் தேதிவரும்***
***கேள்விகளால் வேள்விகளை***
***நான் செய்வேன்***

***(வைரமுத்து, ஆயிரம்பாடல், பா. 1)***

இப்பாடல் தத்துவம் நிறைந்த கவி உள்ளத்தை தரிசிக்க வைக்கிறது. மாலைப் பொழுதை, பொன் மாலைப் பொழுது எனக் கவிஞர் விளிக்கின்றது உள்ளத்தைத் தொடுகிறது. வானத்தைப் போதிமரமாக கவிஞர் குறிப்பிடுவதிலிருந்து போதிமரம் என்பது குறியீடாகப் பரிணமிக்கின்றது. உலகம் ஒரு நாள் நீதியை உணர்த்தும். அதனால் திருநாள் உண்டாகும். என்ற உலக நியதியை, தத்துவ உண்மையை வரிகளால் புரியவைப்பது அவரது தத்துவப் பார்வையை மிளிரச்செய்கின்றது.

தமிழ் இசையினால் மரணத்தைக்கூட வெல்லலாம் என்ற உண்மை கவிஞர் வைரமுத்து பேசுவது உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கிறது. ஒரு உண்மைச் சம்பவம் இவ்விடத்தில் ஞாபகம் வருகிறது. தூக்குத்தண்டனையில் ஒரு இசை வல்லுநரிடம் உனக்கு மரண தண்டனைக்கு நேரமாகிவிட்டது. உனது கடைசி ஆசை என்ன என்றபொழுது, அவன் தன்னை இசைப்பாடலொன்று பாட அனுமதி கொடுக்கவேண்டும் என்கிறான். பின்னர் அவனின் இசையில் மெய்மறந்து மரணதண்டனை நேரம் கழிந்து போனது என்ற செய்தி இவ்விடத்தில் நோக்கத்தக்கது. உதய கீதம் என்னும் திரைப்படத்தில் தூக்குமேடைக் கைதி குழந்தையின் உயிர்காக்கும் நிதிக்காகப்

பாடியதாக கவிஞர் வைரமுத்து பாடும் பாடல் எம்மையெல்லாம் அதிரவைக்கிறது.

**உதய கீதம் பாடுவேன்**
**உயிர்களை நான் தொடுவேன்**
**ஒலிகளில் பூத்தொடுப்பேன்**
**உலகமெல்லாம் மறந்து போகும்**
**மரணம் கூட இறந்து போகும்**

***(வைரமுத்து, ஆயிரம்பாடல், பா. 141)***

திரையிசைப் பாடல்களால் உயிர்களை மீட்டெடுக்க முடியும் எனவும் ஒலிகளால் அவர்களை வாழவைக்க முடியும் எனவும் மரணத்தைக்கூட வெல்லமுடியும் என்ற தத்து வத்தைப் புதிய சொற்களால் புதிய பாணியில் பேசுகின்றார். உயிர், உலகு என்கின்ற தத்து உண் மையைப் புதிய கோணத்தில் பதிய வைக்கிறார். சொற்களால், பொருளினால் எம்மை உறைய வைக்கிறார்.

குழந்தையும் கடவுளும் ஒன்று என்று எல்லோரும் பேசக் கேட்கிறோம். அதை ஒரு தத்துவப் பாடலாகக் கவிஞர் முன்வைப்பது அவரது தத்துவப் பார்வையை எமக்கு மீட்டுத் தருகின்றது. சிப்பிக்குள் முத்து என்ற திரையிசைப் பாடலில் வரம் தந்த கடவுளுக்குப் பதமான லாலி என்று தொடங்குகின்றார். கடவுளும் மனிதனும் ஒரு வீட்டில் குடியிருப்பது தொட்டிலில் மட்டும்தான் என்று புதிய கலைச்சொற்களால் வடிவமைப்பது கவிஞரின் அழகியல் உணர்வைப் பிரவாகிக்கின்றது.

**வரம் தந்த சாமிக்கு பதமான லாலி**
**ராஜாதி ராஜனுக்கு இதமான லாலி**
**குறும்பான கண்ணனுக்கு சுகமான லாலி**
**ஜகம் போற்றும் தேவனுக்கு வகையான லாலி**
**கல்யாண ராமனுக்குக் கௌசல்யை நானே**
**யதுவம்ச வீரனுக்கு யசோதை நானே**
**கருயானை முகனுக்கு மலை அன்னை நானே**
**பார்போற்றும் முருகனுக்குப் பார்வதியும் நானே**
**................................**
**என் தேவன் உறங்க பஞ்ச ரதங்கள் பாடும்**

***(வைரமுத்து, ஆயிரம் பாடல், பா, 199)***

குழந்தையை ஆண் குழந்தையாகவும் கவிஞர் தன்னைத் தாயாகவும் பாவனை பண்ணிய பாடலாக இப்பாடல் அமைகின்றது. இராமர், கண்ணன், விநாயகர், முருகன் போன்ற கடவுளரும் குழந்தையும் ஒன்றாகவும் கவிஞர் தான் தாயாகவும் பாவனை மரபில் நின்று பாடிய பாடலாக இதனைக் கொள்ளலாம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பாவனை முறையான தாய் - சேய் மரபினைப் புதிய சொற்களால் புதிய முறையில் கையாள்வது அவரது தத்துவ நோக்கையும் அழகியல் உணர்வையும் பதிய வைக்கிறது. இறைவனும் ஆன்மாவும் ஒன்று என்ற தத்துவப் பிரவாகத்தை இதனூடாகப் பதியவைக்கின்றார் கவிஞர்.

உன் கண்ணில் நீர் வழிந்தால் என்ற வைரமுத்துவின் திரையிசைப்பாடல், உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுகிறது என்ற பாரதியின் பாடலுடன் ஒத்துச் செல்வதை நோக்கலாம்.

**கண்ணில் என்ன கார்காலம்**
**கன்னங்களில் நீர்க்கோலம்**
**..........................**
**விழியில் விழும் துளி – என் மார்பில்**
**வீழ்ந்ததே கண்ணே**
**அமுதம் சிந்தும் கண்ணில் கண்ணீரா**
**நியாயமா பெண்ணே**

***(வைரமுத்து, ஆயிரம்பாடல், பா. 144)***

இப்பாடலில் கவிஞர் தன்னைக் காதலனாகவும் பெண்ணைக் காதலியாகவும் கொண்டு பாடல் புனைந்துள்ளார். நாயன்மார்களும் ஆழ்வார்களும் காதலன், காதலி மரபினைப் பேணிவந்துள்ளனர். அதேபோன்று பாரதியும் புதிய பாணியில் அம்மரபினைப் பின்பற்றினார் எனலாம். வைரமுத்துவும் ஆன்மாவின் சிற்றின்பத்தைப் பேரின்பமாகப் பழைய மரபினைப் புதிய சொற்கோலங்களால் வடிவமைப்பது அவரது ஆன்மாவின் இருப்பைக் காட்டுகின்றது. ஆன்மாவின் விருப்பின் தேடலையும் அதன் யதார்த்தத்தன்மையினையும் இப்பாடலால் கவிஞர் வைரமுத்து வாசகரின் மனதில் குடிகொள்கின்றார் எனலாம்.

அவரது தத்துவப் பாடல்கள் பற்றிப் பலர் பேசுவதில்லை. அவரது சமூக நோக்குப் பற்றியே



CS CamScanner

பேசுவதைக் காண்கின்றோம். ஆனால் அவரது பாடல்களில் தத்துவமும் செறிந்துள்ளது. கலைஞர் கருணாநிதி அவர்கள் கவிஞர் வைரமுத்துப் பற்றிக் கூறியதை இங்கு மீட்டுப் பார்க்கலாம்.

***தம்பி வைரமுத்து தமிழ்கூறு நல்லுலகில்***
***தனித்தன்மை மிகுந்த தமிழ் ஆற்றலால்***
***தனக்கெனத் தனியே புகழிடம் பெற்றிருப்பவர்***
***அவரது உயரம் எனக்கு நன்றாய்த் தெரிகிறது***
***அவர் மேலும் மேலும் உயர்வார் என்பதும்***
***எனக்குத் தெளிவாகப் புரிகிறது.***

***(கவிஞர் மு. கருணாநிதி, ஆயிரம் பாடல், முகவுரை)***

கவிதை யதார்த்தத்தில் உயர்ந்தார். தத்துவ ஞானத்திலும் உயர்ந்தார் என்பதைக் கலைஞன் உயர்வு என்ற சொல் குறிக்கின்றது எனக் கொள்ளலாம்.

திரையிசைப் பாடல்களில் காதல் பற்றி நிறையவே பேசுகின்றார். காதலை மகிழ்ந்து அறிவுரை கூறுவனவாகவும் அவரது பாடல்கள் அமைகின்றன. பைத்தியங்களுக்குப் பரிசு காதல் தான் என்று கூறுகின்றார். தாஜ்மகால் தேவையில்லை, காதல் சொர்க்கத்திலும் வாழக் கூடியது. பருவராகம் என்ற திரையிசைப் பாடலில்,

***காதல் இல்லையென்று சொன்னால்***
***பூமியும் இல்லை***
***காதல் இன்றி யாரும் இங்கில்லை.***

***(வைரமுத்து. ஆயிரம்பாடல், பா. 257)***

என்ற பாடல் வரிகளில் சமத்துவம் பெருக வேண்டும். ஜாதிகள் ஒழியவேண்டும். பழையது அழியவேண்டும். புதுயுகம் பெறவேண்டும் என்ற நோக்கில் பாடல்களைக் கட்டமைத்துள்ளார். அவரது வரிகள் ஒவ்வொன்றும் சமூகத்திற்கு அறிவுரை புகட்டுவனவாகவும் அறிவைப் போதிப்பனவாகவும் உள்ளத்தைத் தெளிவிப்பனவாகவும் முடிகின்றன.

'கலைஞர், வைரமுத்து அவர்களே தன் மீது எறியப்படும் இன்னொரு விமர்சனம் தத்துவப் பாடல்கள் குறைவு என்பது" எனவும் அதற்கான காரணங்களையும் முன்வைப்பது நோக்கத்தக்கது. (வைரமுத்து, ஆயிரம்பாடல், முகவுரை. ப. 29)

## முடிவுரை

தத்துவம் என்பதன் பொருள் காலத்துக்கு ஏற்ப வளர்ச்சி கண்டுள்ளது. தத்துவக் கண்ணோட்டத்துடன் கவிஞர் வைரமுத்துவின் பாடல்களைத் தரிசிக்கும்போது உள்ளம் உறைகின்றது. கலைஞரின் பாடல்களில் தத்துவத்தினை யதார்த்தமாக நோக்கமுடிகின்றது. அவரது பாடல்கள் அரசியல், குடும்பம், காதல், உறவு, இலட்சியம் என்பவற்றை மெட்டுக்களாக உருவாக்கி சொற்சித்திரங்களால் தத்துவ உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

## உசாத்துணை நூல்


1. வைரமுத்து பொன்மணி கவிஞர், (2011), ஆயிரம் பாடல்கள், சூர்யா லிட்ரேச்சர், சென்னை.
2. கருணாநிதி கலைஞர், (2009), என் தம்பி கலைஞர் வைரமுத்து சொற்பொழிவுகள், சூர்யா இலக்கியம், சென்னை.
3. பொன்னியின் செல்வன். சு., (2004), வைரமுத்துவின் படைப்புக்களில் வடிவமும் வளமும், அய்யா நிலையம், தஞ்சாவூர்.
4. பாரதியார், (1964), பாரதியார் கவிதைகள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
5. பாரதிதாசன், (1991), தேனருவி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.




CamScanner